DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 10.09.2024.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.03/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.2 |
| Name | : | அழகேசன் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. Chandar Rao, Grade III Bench Clerk, of this court, on 10.09.2024. in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கிளேசி புருக் எஸ்டேட்டில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 10.03.2024-ம் தேதி மேலாளர் எனக்கு மாலை சுமார் 06.00 மணிக்கு போன் செய்து யாரோ எஸ்டேட்டில் மிளகு திருடியுள்ளார்கள் அவர்களை பிடிக்கவேண்டும் அதற்கு நீ வா என அழைத்தார். கீழ் ரோட்டில் நானும் மேலாளரும் இருந்தோம். சங்கி, பர்வீன், வெள்ளையன் ஆகியோர் மூட்டை அருகே ஒலிந்திருந்தார்கள். இரவு சுமார் 10.00 மணிக்கு எதிரி கோவிந்தன் அவரது பைக்கில் வந்து முள் வேலி ஓரம் நிறுத்தி விட்டு மூட்டை அருகே சென்றார். மூட்டை எடுத்துக்கொண்டு அவர் நகர்ந்தபோது அவர் முகத்தில் டார்ச் லைட் அடித்து பார்த்தபோது கோவிந்தன் என தெரியவந்தது. உடனே அவர் மூட்டையை போட்டுவிட்டு முள் கம்பி மீது ஏறி கீழே விழுந்ததில் கால் அடிப்பட்டது. தான் செய்தது தவறு என்றும் யாரிடம் சொல்லவேண்டாம் என்றும் மேலாளரிடம் கெஞ்சினார். விசிடர் சுப்பிரமணிக்கு மேலாளர் தகவல் சொன்னார். அவர் எதிரியிடம் போன் பேசினார். அன்று இரவு எதிரியை அவரது வீட்டில் விட்டு விடுமாறும் மறுநாள் எஸ்டேட்டிற்கு வருமாறும் சொன்னார். மறுநாள் எதிரி வந்து தான் ஏற்கனவே 3 மூட்டை காப்பி, 1 மூட்டை மிளகை திருடி இருப்பதாக ஒப்புக்கொண்டு தன் வீட்டில் இருப்பதாகவும் அதை எடுத்துத்தறுவதாகவும் சொன்னார். அதை எதிரி வீட்டிலிருந்து எடுத்துக்கொடுத்தார்கள் ஜீப் மூலம் எஸ்டேட்டிற்கு எடுத்து வந்தார்கள். எதிரி

தான் செய்த தவறை ஒப்புக்கொண்டார். இரண்டாவது நாள் மேலாளர் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதாக சொன்னார். போலீசார் இது சம்மந்தமாக என்னை 14–ம் தேதி எஸ்டேட்டில் வைத்து விசாரணை செய்தார்கள் நான் நடந்த விவரம் சொன்னேன்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

11–ம் தேதி நான் அலுவலகத்தில் இருந்தேனா என்றால் ஆமாம். 10–ம் தேதி சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. 11–ம் தேதி நான், சுரேஷ், மாது, சுப்பிரமணி ஆகியோர் தாக்கியதால் தான் எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 4 நாள் கழித்து நாங்கள் தான் காவல் நிலையத்தில் பொருட்களை ஒப்படைத்தோமா என்றால் நான் ஓட்டுநர் என்பதால் நானும் உடன் சென்றேன். எதிரியை 10–ம் தேதி இரவு பிடித்ததாக சொல்லும் இடத்தை போலீசாருக்கு நாங்கள் அடையாளம் காட்டினோமா என்றால் ஆமாம். அந்த இடத்தை போலீசார் குறித்து கொண்டார்களா என்றால் நாங்கள் அடையாளம் காட்டினோம். நான் எஸ்டேட்டில் குடியிருக்கிறேனா என்றால் இல்லை வாழவந்தியில் குடியிருக்கிறேன். அ.சா.1 எஸ்டேட் மேலாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. துவாரகநாதன் இறந்த பிறகு எஸ்டேட்டில் திருட்டு சம்பவம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது என்றால் மேலாளர் அசோக்குமாரும், எதிரி தான் திருடினார்கள் அவர்களை பிடித்துவிட்டோம்.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. M. Jayanthi,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.